Registered No. M. 442.

सत्यमेवजयति

THE MESSENGER OF TRUTH

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
9 - APR 1915
MADRAS.

# சத்திய தூதன்.

APRIL, 1915. PRICE, 1 PIE.—விலை, க பை. ஏப்பிரல்மீ, 1915.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**இந்திய அரசர்.** — இந்திய அரசர்கள் ஏராளமான நன்கொடைகளை யுத்தத்துக்கென்று அளித்திருக்கிறார்கள்.

**ஜர்மன் கப்பல்.**—இதன் ஒரே ஒரு சண்டைக் கப்பல் இப்பொழுது எம்டெனைபபோல சமுத்திரத்தில் அலைந்துகொண்டிருக்கிறது. மற்றவையெல்லாம் மூழ்விக்கப்பட்டும் துறைமுகங்களில் ஒளித்துக்கொண்டு மிருக்கின்றன.

**யுத்தமும் சாராயமும்.**—இந்தப் பெரும்போரால் மடிகிற வீரரைவிடப் பெருந்தொகையான பேர்கள் அமெரிக்காவிலே மதுபானக் கெடுதியினால் வருஷந்தோறும் கோடிக்கணக்காய் மாண்டுபோகிறார்களாம்.

**யுத்தமும் காலேஜ் மாணுக்கரும்.** — ஆயிரம் பதினாயிரமான மாணுக்கர்கள், பற்பல காலேஜ்களிலிருந்து யுத்தத்துக்குப் போயிருக்கிறபடியால், அனேக காலேஜ்கள் வெறுமையாய் இருக்கின்றன. மரணம் பிரவேசிக்காத குடும்பங்கள் ஐரோப்பாவில் தற்காலம் மெத்த அருமையாம்.

**இந்திய வீரர்கள்.**—இங்கிருந்து பிரான்சுக்குப் போயிருக்கிற நமது வீரர்கள் எதிர்பாராத தைரியத்துடன் போர்செய்து வெற்றியடைந்து வருகிறார்கள். இதனால் இந்தியர்கள் அங்கிலேயர் முதலானோருக்கு எவ்வளவேனும் தாழ்ந்தவர்களல்லவென்பது திருஷ்டாந்தமாய்விட்டது.

**பேந்தேகோஸ்து மீஷன்.** — இப்பெயர்கொண்ட பிரசங்கிகள் பல விடங்களுக்குப் போய்ப் பொய்யுபதேசம் போதித்து சபைகளைக் கெடுக்கிறபடியால், கிறிஸ்தவர் அவர்களுக்கு எவ்வளவும் இடங்கொடாமல் ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்று தென் இந்திய ஐயர்மார் கான்பிரென்சில் தீர்மானிக்கப்பட்டது.

**கஷ்டமான சில காரியங்கள்.**—மன்னிப்புக் கேட்டல்; மறுபடியும் தொடங்கல்; குற்றத்தை ஒப்புக்கொள்ளல்; புத்திமதி கேட்டல்; அறஞ்செய விரும்பல்; நிதானித்தல்; வெற்றியைத் தாங்கல்; மீண்டு மீண்டு பிரயாசப்படுதல்; நினைத்துச் செய்தல்; தவறுப்புத்தியடைதல்; மன்னித்து மறத்தல்; புதுவழி செல்லுதல்; தண்டனை சகித்தல். இவை கஷ்டமாயினும், அதிகப் பயன் செய்பவை.

**சூயெஸ் கனல் என்னும் வாய்க்கால்.** — இது 85 மைல் நீளமும், 31 அடி ஆழமும், 108 அடி அகலமுமுள்ளது. 1875–இல் பிரிட்டிஷ் அரசு ஒவ்வொன்று 20 பவுண் பெறுமான 176,602 ஷேயர்களை வாங்கிக்கொண்டமையால், பிரான்சும் இங்கிலாந்தும் மேற்படி வாய்க்காலுக்கதிகாரிகளாய் விட்டார்கள். இதைப் பிடிக்கத் துருக்கியர், மூடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டாற்போல், படையெடுத்துத் தோற்றுப்போனார்கள்.

**நல் ஆலோசனை.**—எரிச்சலாயிருந்தால், 27–ம் சங்கீதம் வாசி. அதைரியப்பட்டிருந்தால், 47–ம் சங்கீதம் வாசி; மனுஷன் உன்னிடத்திற் பகை சாதித்தால் யோவான் 15–ம் அத். வாசி; உன் வேலையைப்பற்றிச் சலிப்பற்றிருந்தால், 126–ம் சங்கீதம் வாசி. மனம் வாடியிருந்தால் எபிரெயர் நிருபம் 12–ம் அத். வாசி. உன் வழக்குச் சாயாவிட்டால், யாக்கோபு நிருபம் வாசி. பிறரிடம் நம்பிக்கை இழக்கிறதாயிருந்தால், 1 கொரி. 13–ம் அத். வாசி. ஒவ்வோர் வேளையில் நீதிமொழி 7–ம் அத். வாசி.

**யுத்த முடிவு.**—யுத்தமொழிந்து சமாதானம் உண்டாகிற காலத்தில் ஜர்மன் சக்கரவர்த்தி ஒழிவாராம்—ஒரு சாதாரண அரசனாயிருப்பார்; ஜர்மனியிலே ஒருபாகம் பிரான்சுக்கும், ஒருபாகம் டென்மார்க்குக்கும், ஒருபாகம் ரஷியாவுக்கும் சேர்ந்துவிடும். துருக்கியும் அவ்வாறே பங்கிடப்படும். ரஷியா கான்ஸாத்திநோப்பிலைப் பிடித்துக்கொள்ளும்—பலெஸ்தீனா கிறிஸ்து அரசாகும். போலாந்து ஒரு பிரத்தியேக ராஜ்யமாய்விடும். இந்தியாவுக்கும் சில நன்மைகள் கிடைக்கும். கிறிஸ்தவ சபையும் விர்த்திபெறும்.

**யுத்த விஷயங்கள்.**—யுத்தம் முன்போலவே பல ஸ்தானங்களில் மும்முரமாய் நடந்துகொண்டிருக்கிறது. துருக்கியைச்சேர்ந்த டார்டனெல்ஸ் என்கிற ஜலசந்தியில் புதிதாகக் கப்பற்சண்டை ஆரம்பித்திருக்கிறது. துருக்கியின் தலைநகராகிய கன்ஸ்தாந்திநோப்பில் நகரத்தைப் பிடிக்க இரண்டு வழியுண்டு. ஒன்று வடக்கே, ஒன்று தெற்கு. வடக்கேயிருந்து ரஷியர் கப்பல்களைக் கொண்டு வருகிறார்கள்; தெற்கேயிருந்து அங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் மேற்படி ஜலசந்திமார்க்கமாகக் கப்பல்களைக் கொண்டுபோகிறார்கள். அனேக கோட்டைகளை அழித்துவிட்டார்கள். ஆகிலும், அந்நகரத்தைப் பிடிக்க ஒருமாதஞ் செல்லுமாம். ஜர்மனியிலே தானிய தவசமில்லாமல், ஜனங்கள் மெத்தக் கஷ்டப்படுகிறார்கள். பிறதேசக் கப்பல்களைப் பிடிக்கிறதாக பயமுறுத்தியும் பயனில்லை. எதாயினும் ஒரு வர்த்தகக்கப்பல் தப்பித்தவறி அவர்களால் மூழ்விக்கப்படுகிறதே தவிர, மற்றப்படி ஆயிரமாயிரமான கப்பல்கள் வழக்கம்போல யாத்திரை செய்துகொண்டு வருகின்றன. தரையுத்தத்திலே, ஜர்மன்கள் அனேகமாய்த் தோற்றும், வீரர் இழந்தும், மற்ற நாசங்களடைந்தும் வருகிறார்கள். லாய்ட் ஜார்ஜ் என்கிற மந்திரி அக்டோபர் மாதத்துக்குள் சண்டை ஓய்ந்தாலும் ஓயுமென்கிறார். அப்படித்தான் ஓய்ந்தாலும், வீரர்கள் யாவரும் தத்தம் நாடுநகரம் திரும்பிவர இன்னும் ஆறுமாதஞ் செல்லுமாம். இதற்குள்ளே கணக்கு வழக்கில்லாத திரவிய நஷ்டமும், உயிர்ச்சேதமும் நேரிடுமென்பதற்குச் சந்தேகமில்லை. கடவுள் தாம் இந்தப் பெருந்தீமையிலிருந்து நன்மையை விளைவிக்கவேண்டும்.

**ஏப்பிரல்மூ பஞ்சாங்கம்—**

| வாரம். | ஏப்பிரல்மீ =பங்குனி—சித்திரை. ⊙ பௌர்ணமி, 28 உ ● அமாவாசை, 14உ | | | | | பங்குனி—சித்திரை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 6 | 13 |
| திங்க ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 7 | 14 |
| செவ் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 1 | 8 | 15 |
| புதன் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 2 | 9 | 16 |
| வியா ... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 3 | 10 | 17 |
| வெள் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 4 | 11 | 18 |
| சனி ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 5 | 12 | ... |

## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

பத்தாவது கதை

### பயந்தவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.

ஒரு கிராமத்தில் இராமனும், கோவிந்தனும் என்னப்பட்ட இரண்டு சிநேகிதர் இருந்தார்கள். அவர்கள் இருவரும் ஒரு கிராமத்துக்குப் போய் வரும்படி தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள். அப்படியே அவர்கள் இருவரும் குறிக்கப்பட்ட தினத்தில் வெயிலுக்கு முன்னதாகப் போய்விட வேணுமென்று விடியற்காலம் 3 மணிக்குப் புறப்பட யோசனை செய்தார்கள். மணித் திட்டம் தெரியாமல் நடுஜாமத்தில் புறப்பட்டுவிட்டார்கள். தங்கள் கைகளில் வழிக்கு வேண்டிய கட்டுசாதம் உடுப்புகள் முதலியவைகளையும் கையில் பிடித்துக்கொண்டு நடந்துபோகிறார்கள். போகும்போது அதிக இருளாகத்தான் காணப்பட்டது. மனதிலேயும் கொஞ்சம் பயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் வெளிக்குக் காண்பிக்காமல் நடக்கிறார்கள்.

காட்டுவழியில் போகும்போது பார்வைக்கு அதிக இருளாகவும் பட்சிகளின் சத்தங்கள் அதிக பயங்கரமாகவும் இருக்கிறது. அப்போது இராமனுக்கு அதிக பயம் இருந்தபடியினால் கோவிந்தனைப் பார்த்து, அடே கோவிந்தா, நாம் கொஞ்சம் எச்சரிக்கையாகவும் கவனமாகவும் நடக்கவேணும். ஏனென்றால் இந்தக் காட்டுவழி பாதையில் முனியாண்டிபேய் இருக்கிறதாகக் கேள்விப்பட்டு இருக்கிறேன் என்று சொன்னான். அதற்கு கோவிந்தன், அடா இராமா, நானும்கூட கேள்விப்பட்டுத்தான் இருக்கிறேன். ஆனாலும் நாம் மனத்தைரியத்தோடுதான் நடக்கவேணும். நாம் மணி தெரியாமல் அதிக முன் இருட்டிலே புறப்பட்டுவிட்டோம் யென்று இருவரும் பேசிக்கொண்டு போகும்போது பக்கத்தில் இருந்த கோவிலுக்குள் ஒரு பட்சியின் சத்தம் அதிக பயங்கரமாகக் கேட்டது. உடனே இராமன், அடே கோவிந்தா, அதோ முனியாண்டிபேய் கூச்சல் போடுகிறது என்ன செய்யலாம் யென்றான். அதற்கு கோவிந்தன், பயப்படாதே அது ஒரு பட்சியின் சத்தம், அது நமக்கு பிரமிப்பை உண்டுபண்ணுகிறது என்று சொல்லிக்கொண்டு கொஞ்சதூரம் போகும்போது வழியின் முன்னால் ஒரு பெரிய பூதம் போல் இருளாகக் காணப்பட்டது.

அதைப் பார்த்ததும் இராமன், அடே கோவிந்தா முனியாண்டிபேய் இதோ முன்னதாக வந்து நின்றுகொண்டதே யென்று சொன்னான். இருவருக்கும் அதிக திகிலும் கலக்கமும் பிடித்துவிட்டது. உடனே இருவரும் கைகோத்து அங்கேயே நின்றுகொண்டார்கள். அவர்களுக்கு முன்னால் பெரிய பூதம்போல் நிற்கிறது. அப்போ கோவிந்தன் கொஞ்சம் தைரியம்கொண்டு இராமனைப் பார்த்து, அடே இராமா இந்த முனிபேய் சாகவேணும் அல்லது நாம் இருவரும் சாகவேண்டும், நான் ஒரு உபாயம் சொல்கிறேன் கேள் என்று சொல்லி நாம் பின்னால் திரும்பினாலும் அடித்துப்போடும் முன்னால் நடந்தாலும் அடித்துப்போடும். ஆகையினால் நாம் இருவரும் ஒன்றுபோல் காலைத் தூக்கிக்கொண்டு ஒரே மிதியாக மிதிக்கலாம், அப்போ மிதியை வாங்கிக்கொண்டு ஓடிப்போய்விடும் என்றான். அப்படியே இராமனும் சம்மதித்துக்கொண்டு இருவருமாகக் காலை ஒன்றுபோல் தூக்கி ஒரு உதை உதைத்தார்கள். உடனே இருவர்களுக்கும் கடுங்காயம்பட்டது; இரத்தம் வடிகிறது. அப்போதுதான் அவர்கள் அதைக் கூர்ந்து தடவிப் பார்த்தார்கள். அது பூதம் அல்ல படர்ந்த பனைமரச்செடியாகக் காணப்பட்டது. அதில் இருந்த கூர்மையான கருக்குமட்டை கால்களைக் காயப்படுத்திவிட்டது.

அதின்பிறகு தான் அவர்களுக்கு மனக்கலக்கம் நீங்கி தங்களுடைய அறியாத தன்மைக்காக மனவருத்தப்பட்டு, நம்முடைய மனதின் பயம் இவ்வ



பிளாரென்ஸ் நகரம்.

ளவாக நம்மை திகில் உண்டாக்கி இப்படி கடுங் காயத்தை அடையும்படி செய்துவிட்டதேயென்று துக்கித்து விடிந்தபிறகு பக்கத்தில் இருந்த கிராமத்தில் போய் தங்கள் காயத்தைக் காட்டினார்கள். அவ்விடத்தில் இந்தக் காட்சியைக் கண்டு கேட்டவர்கள் அதிசயப்பட்டு ஆனாலும் உங்களைப்போல் பயங்காளிகள் பூலோகத்தில் இருக்கமாட்டார்கள் என்று அவர்களை நிந்தித்தார்கள்.

G. D.

## THE LATE HONOURABLE MR. GOKHALE

## காலஞ்சென்ற ஆனரபில் மெஸ்தர் கோக்கலே

எத்தேசத்துள்ளும் சுயதேச அன்பினாலேவப்பட்டு அருஞ்செயல்புரிந்து அழியாப் புகழ்படைத்தோர் சிறிது மில்லாதிரார். கீழ்தேசங்களுள் முற்கால கீர்த்திபெற்று விளங்கும் இப்பரத கண்டத்திலும் அவ்வகையோர் அனந்தமுளர். ஆயினும் தற்கால இந்தியருள் சுயதேச நன்மைக்காகவும் அதன் உயர்கதிக்காகவும் பேர் முயற்சி புரிந்து நம்தேசத்தவரனைவரது அன்புக்கும் உரித்தாயுள்ள உயர்மக்களில் ஓராணிமுத்தென உறுதியாயுரைக்கவாவர். சென்ற பெப்ருவரி 19-ம் தேதியில் பூனாவில் உயிர்துறந்த ஆனரபில் மேஸ்தர் கோபால கிருஷ்ண கோக்கலே. இம்மகானின் நர்மதேயம் வாசிக்கக்கூடிய எவருக்காயினும் நவீனமாய் தொனிப்பில் அவரை இன்னமும அறியாமலிருந்தது, அவர் பிழையன்றி பிறிந்தவராகா.

இவர் 1866-௵ கோலாப்பூர் என்னுமிடத்தில் ஓர் ஏழைக் குடும்பத்திற் பிறந்தார். அவ்விடத்து வித்தியாசாலையில் கற்கக்கூடியதைக் கற்றதும், பின்னர் பம்பாய் (Bombay) நகரிலுள்ள எல்பின்ஸ்டன் கலாசாலையிலும் (Elphinstone College) பூனாவிலுள்ள தக்காண கலாசாலையிலும் (Deccan College, Poona) பயின்று 1884-௵ பி. ஏ. பட்டம் பெற்றார். உடனே தக்காணத்து வித்தியா பரிபாலன சங்கத்தை (Deccan Educational Society)ச் சேர்ந்து அதிலே சொற்ப சம்பளத்துக்காக உழைத்தனர். இவ்வாறு சுயமேன்மை நாடாது தன் தேசக்கல்வி விர்த்தியின் தாபத்தால் இவராரம்பித்த ஊழியமானது பிற்பாடு இவர் இந்திய சேவை சங்கத்தை (Servants of India Society) பிறப்பிப்பதற்கு இவரைத் தகுதியுள்ளவராக்கிற்று. இச்சமயத்தில் பம்பாய் நீதிபதிகளி லொருவராகிய மாட்சிமைபெற்ற ரன்னடே அவர்களை அடுத்துப் பழக நேரிட்டது. அக்கனவானின் ஆலோசனைப்படி இந்தியாவின் வரவு சிலவுவிஷயங்களை நன்றாய்ப் பாடம்பண்ணி அதில் தேர்ச்சியடைந்தும் இந்தியாவின் சீர்திருத்தத்துக்குதவியான காரியங்களின்பேரில் முறையே பத்திரிகைகளுக்கு எழுதியும் வந்தனர். 1897-௵ இந்தியாவின் பொருள் நிருவாகஸ்திதியை விசாரித்தறிய இங்கிலாந்தி லேற்படுத்தப்பட்ட வெல்பி பிரபுவின் விசாரணைக் கூட்டத்திற்குமுன் (Welby Commission) தம் அபிப்பிராயங்களை யெடுத்துரைத்தனர். அப்போது தாம் கருதிய காரியத்தை ருசுப்படுத்தக்கூடாத போனபோதிலும் அவ்விடத்தவரால் மிக்கக் கண்ணியம்பெற்றார். பின் அரசு முறைகளில் தமக்கிருந்த அறிவாலும் அதைத் தெளிவா யெடுத்துரைக்கக்கூடிய பேச்சுத்திறமையாலும் 1900-௵ பம்பாய் சட்டம் பிரயாணிக்கும் சபையிலும் (Bombay Legislative Council) 1902-௵ ராஜப்பிரதிநிதியின் சட்ட நிருபண சபையிலும் (Viceroy's Legilative Council) ஓர் சங்கத்தவராயினர். குடிஜனங்களுக்கு நன்மையென அவருக்குப் புலப்பட்டதெததுவோ அதற்காக எத்தனைதரம் தோல்வியடைந்தாலும் சோர்ந்துபோகாமல் கைகூடுமட்டும் விடாமுயற்சி செய்வர். அரசாங்கத்தை தேசவிஷயங்களில் அடிக்கடி எதிர்த்தாலும் அவர் கஷ்டங்களையும் கவனித்து பொறுமையோடு எவ்விஷயத்தையு முடிக்க முயல்வார். தென் ஆப்பிரிக்காவில் நம்மவர்களுக்கிருந்த கஷ்டங்களை நீக்குவதிலும் இவருடைய ஒத்தாசை இந்தியர்களுக்குப்போலவே அரசாங்கத்தார்க்கும் இன்றியமையாததாயிருந்தது. இவர் இந்தியாவுக்குச் செய்த எண்ணிறந்த நன்மைகளில் வித்தியானுகூலமாகச் செய்தவையே சிறந்தன. கீழ்தர படிப்பு சம்பளமின்றி சம்பாதிக்க அனுமதி பெறக்கூடாமற்போனபோதிலும் இப்போது கல்வி விஷயமாய் உதவி நன்கொடையா யளிக்கப்பட்டிருக்கும் பெருந்தொகைக்கு இவரே காரணமாவர்.

இவரதற்புத அலங்கார நீதிவழுவா நிஷ்களங்க ஜீவியத்தை விஸ்தரிக்கப்புகில் விரியும். அதற்கு இதல்லவிடம். இவர் சாமர்த்தியமும் சமயோசித யூகமும் நிறைந்தவரானதுபற்றி இவரது உதவி இந்தியர்க்குப்போலவே அரசாங்கத்தார்க்கும் நிராகரிக்கக் கூடாதிருந்தது. ஆயின் ஈஸ்வர அமைப்பு வேறாயிருந்தது. சில்லாண்டுகளுக்குமுன் இவர் தேகசௌக்கியம் குன்ற வாரம்பித்து கிரமமாய் குறைந்து இவ்வுலகவாழ்வுக் கிசையாது மரணமாய் முடிந்தது நம் துர் அதிஷ்டமே. அவரை நெருங்கிய பந்துமித்திரருக்கு ஈஸ்வரன் நல்லாசி ஈவாராக.

இம்மகானின் மரணதுக்கத்தைச் சமுதாயமாய் வெளியிட சென்னை விக்டோரியா சபாமண்டபத்து வடபுர வெளியில் இம்மாதம் 4-ம் தேதி அந்திப் பொழுதில் ஒரு பெருங்கூட்டம் நடந்தேறியது. அதில் ஆனரபில் சிவசாமி ஐயரவர்கள் அக்கிராசனம் வகித்து கனம்: கோக்கலே அவர்களது குணகுணங்களை சிறப்பித்துக் கூறினார்கள். ஆனரபில் ஸார் ஹெரால்ட் ஸ்டீவட் அவர்களும் அப்படியே ஸ்துதித்துரைத்தார்கள். இன்னும் கூடிய அநேக கனவான்கள் உருக்கத்தோடும் பக்தியோடும் அவரது சிறந்த குணங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவற்றையும் பின்பற்ற வேண்டியவற்றையும் எடுத்துக் காட்டினார்கள். இறுதியில் கனம்: கோக்கலே அவர்களின் ஞாபகமாய் சென்னையில் ஓர் பிரதிமை யமைக்கவும் அவராவலோடு ஆரம்பித்த இந்தியசேவை சங்கத்தை (Servants of India Society) தக்க பொருளுதவி செய்து பரிபாலிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

## THE RELIGIONS OF INDIA

## இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

பல்லாயிரம் ஆண்டுகளாய் நம் தேசத்தவர்கள் கடவுளைத் தடவியாகிலும் 'கண்டுபிடிக்க முயன்றிருக்கிறார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை என்றாலும், அவர்களுடைய சகல தத்துவ சாஸ்திரங்களாலும் வேதாந்த உபதேசங்களாலும் இன்னம் அவரைக் கண்டுபிடிக்கவில்லையே. கர்த்தராகிய இயேசுரட்சகரே இந்துக்களின் சகல வாஞ்சையையும் தேட்டத்தையும் திருப்திசெய்கிறவர். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்றவர் அவரே. தேவன் எல்லார்மேலும் இருக்கிறவர். எல்லாருக்காகவும் திரு அவதார புருஷனாய் இப்பூலோகத்துக்கு வந்தவர். எல்லாருக்குள்ளும் வாசம்பண்ணுகிறவர் என்ற சத்தியம் சகல உபநிஷதத்திற்கும் மிஞ்சினதல்லவா? தேவன் நமது பிதா என்றும் மானிடர் யாவரும் சகோதரர் என்றும் வெளிப்படுத்தினவர் இயேசுகிறிஸ்து என்ற திரு அவதார புருஷனே. 'தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்' என்றும், 'தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை' என்றும், தேவன் பூரண சற்குண புருஷரானவர்; 'பரிசுத்தமில்லாத எவனும் அவரைக் காணமாட்டான்' என்றும் வெளிப்படுத்தினவர் இவரே. இவராலேயே இவ்வுலகத்திலும் முக்தி, மறு உலகத்திலும் முக்தி கிடைக்கக்கூடும். அதாவது, இவராலேயே மனுஷனுக்கு விடுதலை, ஸ்திரீகளுக்கு விடுதலை, பிள்ளைகளுக்கு விடுதலை. இவராலேயே நித்தியானந்த மூர்த்தியாகிய கடவுளுடன் சதாகாலமும் பேரின்ப பதவியும் அடைவோம். இவரை நம் சுயதேசத்தார் கண்டுகொள்ளும்படி அவர்களுக்காக ஜெபிப்போமாக, உழைப்போமாக. இயேசுகிறிஸ்துவே இந்துதேசத்துக்கு இரட்சகர்.

"சர்வஜீவ தயாபர பிதாவே, தேவரீர் சகல மனுஷரையும் ஒரே இரத்தத்தினாலே உண்டாக்கி, பூமியில் குடியிருக்கச்செய்து, தூரமானவர்களுக்கும் சமீபமானவர்களுக்கும் சமாதானத்தைச் சுவிசேஷமாகக் கூறி அறிவிக்கும்படி உமது ஏகசுதனாகிய இயேசுகிறிஸ்துவை உலகத்தில் அனுப்பினீரே! இத்தேசத்து ஜனங்களும் மெய்த்தேவனாகிய உம்மை நாடித் தேடி கண்டுபிடிக்கும்படியாக சகல மனுஷர்மேலும் உம்முடைய ஆவியை மழைபோல் ஊற்றுவோமென்று தேவரீர் அருளிய திருவாக்கைச் சீக்கிரமாய் நிறைவேற்றவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்."

(இன்னும் வரும்.)

## THE STORY OF A DAMBAN

## டம்பன் கதை

(தொடர்ச்சி.)

87. பங்கைப் பிரித்தளித்தேன் – பத்திரமாய் நீ யிதனை
மங்காது வைத்திருந்து–மண்ணில் பிழைத்திடுவாய்
88. துன்மார்க்க ரோடிணங்கி–துக்கத்துக் குள்ளாகாதே
சன்மார்க்க ராயிருந்து–சமர்த்தாய்ப் பிழைத்திடப்பா
89. பொருளதை வீணாய்நீ–போக்கடித்துப் போடாதே
அருள்தனை யேயிழந்து – அயராதே வையகத்தில்
90. தக்க சமயமதில் – தந்தையெனைத் தேடிவந்தால்
எக்களிப் பாயிருப்பாய்–என்றுரைத்தான் தந்தையரும்
91. பெருகுதென் கண்ணீர்கள் – பெற்றகுடல் நோகுதடா
கருங்கல்லோ உன்மனம் – கசப்பாச்சோ என் வீடு
92. தந்தைமுகம் பாராயோ–தமையன்முகம் பாராயோ
முந்த யெனைத்தழுவி–முத்தமுட்டுப் போய்வாடா
93. என்று புலம்பியந்த–ஏழைத் தகப்பன்சொல்ல
ஒன்றும் பேசாதிருந்தான்–ஒய்யாரடம்பனவன்

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD

ORA ET LABORA
TRADE MARK



ORA ET LABORA
TRADE MARK

## மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஈனர்களுக்கும்

உபயோகப்படும்படி







**கையினல் தொடாமல் செய்யப்பட்டது.**

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

**மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)**

மதராஸ்.


## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.